09

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## முதலாம் வருட கலைமாணித் தேர்வு 2010/2011
## (January / February, 2016) (வெளிவாரி)
## (Repeat)

RAR
EASTERN UNIVERSITY, SRI LANKA
27 APR 2016

## ECO 101 Principles of Economics

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

01. (அ) "விருப்பங்களையும்", "கேள்விகளையும்" வேறுபடுத்துக.

(05 புள்ளிகள்)

(ஆ) விலைக் கேள்வி நெகிழ்ச்சியினை நிர்ணயிக்கும் மூன்று காரணிகளைப் பெயரிடுக.

(04 புள்ளிகள்)

(இ) சீனிக்கான சந்தைக் கேள்வி வளையியானது Qd = 260-3p எனவும் அதன் சந்தை நிரம்பல் வளையியானது Qs= - 140 + 2p எனவும் கொள்க.

(அ) சீனி ஓரலகின் மீது அரசாங்கம் ரூபா 5 உள்ளூர் பொருள் வரியினை விதிப்பதாகக் கருதுக. வரி அமுலாக்கத்தின் பின்னர் ஓரலகு சீனிக்காக நுகர்வோர் செலுத்தும் விலை யாது?

(03 புள்ளிகள்)

(ஆ) வரியின் காரணமாக நுகர்வோர் மிகையில் ஏற்படும் மாற்றமென்ன.

(03 புள்ளிகள்)

(ஈ) கேள்வி விதியினை விளக்குக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. (அ) குறைந்துசெல்லும் விளைவுவிதியும், அளவுத்திட்ட விளைவுவிதியும் நிறுவனத்தின் உற்பத்திச் செலவுகளை எவ்வாறு பாதிக்கும் என்பதனை விளக்குக.

(07 புள்ளிகள்)

(ஆ) எல்லாச் சந்தை அமைப்புக்களிலும் இலாப உச்சப்படுத்தலுக்கு எல்லை வருவாயானது எல்லை செலவுக்கு சமப்படுவது ஏன் அத்தியாவசியமானது என்பதை விளக்குக.

(07 புள்ளிகள்)

(இ) "நிறைபோட்டி சந்தையில் காணப்படும் நிறுவனமானது விலையினை ஏற்போனாக இருக்கின்றது." இக்கூற்றினை நீர் ஏற்றுக் கொள்கின்றீரா? ஆம் எனின் காரணம் தருக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. (அ) மொத்த முதலீட்டின் கூறுகள் யாவை?

(06 புள்ளிகள்)

(ஆ) தேசிய வருமானம் மற்றும் தனிநபர் வருமானம் என்பவற்றினை வேறுபடுத்துக.

(06 புள்ளிகள்)

(இ) "தனது மொத்த தேசிய வருமானத்தை விடக் கூடுதலாக செலவீட்டை மேற் கொள்ளும் ஒரு நாடு கட்டாயமாக வர்த்தக நிலுவையில் பற்றாக்குறையை எதிர்நோக்கும்". இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

(08 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

04. (அ) குறுங்கால உற்பத்தியினை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஆ) உற்பத்திக் காரணிகளின் விளைதிறனை அதிகரிக்கும் பிரதான காரணிகளை விளக்குக.

(05 புள்ளிகள்)

(இ) தனியுரிமை போட்டியிலிருந்து சிலருரிமையை வேறுபடுத்துக.

(05 புள்ளிகள்)

(ஈ) குறைந்து செல்லும் விளைவு விதியானது குறுங்கால செலவு வளையியின் வடிவத்தில் எத்தகைய விளைவுகளைக் கொண்டுள்ளது என்பதை விளக்குக.

(05 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

05. (அ) பொருளாதார வளர்ச்சியையும், பொருளாதார அபிவிருத்தியையும் வேறுபடுத்துக.

(07 புள்ளிகள்)

(ஆ) பொருளாதார வளர்ச்சியின் பிரதான காரணிகளைக் குறிப்பிடுக.

(06 புள்ளிகள்)

(இ) நாடொன்றின் உற்பத்தித்திறன் மட்டத்தை நிர்ணயிக்கும் பிரதான காரணிகளை கூறுக.

(07 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

06. (அ) பேரினப் பொருளாதாரச் சமநிலை என்றால் என்ன என்பதை விளக்கி பேரினப் பொருளாதார சமநிலை அடைவதற்கு தேவையான அடிப்படை நிபந்தனைகளைக் கூறுக?

(05 புள்ளிகள்)

(ஆ) பணவீக்க இடைவெளியையும், பணச்சுருக்க இடைவெளியையும் வேறுபடுத்துக.

(06 புள்ளிகள்)

//

(இ) மூடிய பொருளாதாரமொன்றில் தரப்பட்ட காலப்பகுதியொன்றில் முதலீடு 100 ஆகவும், அரச கொள்வனவுகள் 75 ஆகவும், தேறிய வரிகள் 100 ஆகவும், நுகர்வு $C = 25+0.8Y_d$ என்னும் சார்பிலும் தரப்படுவதாகக் கொள்க. இங்கு $Y_d$ செலவிடத்தக்க வருமானம் ஆகும்.

(i) அரசாங்க செலவீட்டுப் பெருக்கி மற்றும் வரிப் பெருக்கி என்பனவற்றின் பெறுமானங்களைக் கணிப்பிடுக.

(03 புள்ளிகள்)

(ii) இப்பொருளாதாரத்தின் நிறைதொழில் மட்டம் 1000 ஆகக் கொள்க. நிறைதொழில் மட்ட வெளியீட்டினை அடைய அரசாங்க வெளியீடு எவ்வளவால் அதிகரிக்கப்படல் வேண்டும்? மாறாக வரி அளவீட்டை எவ்வளவால் குறைத்தால் நிறைதொழில் மட்டத்தை அடையப்போதுமானதாக இருக்கும்?

(06 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

07. (அ) கடன் அட்டைகள் பணமாகக் கருதப்படாததின் காரணங்களை விளக்குக.

(07 புள்ளிகள்)

(ஆ) பொருளாதாரத்தில் நிதிச்சந்தையின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(07 புள்ளிகள்)

(இ) இலங்கையில் வணிக வங்கியின் பிரதான தொழிற்பாடுகளை விளக்குக.

(06 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

08. பின்வருவனவற்றிற்கு சிறு குறிப்பு எழுதுக.

(அ) நேர்பொருளியல், நியமப் பொருளியல்

(ஆ) உயர்வலுப்பணம்

(இ) அகச்சிக்கனங்கள்

(ஈ) பொருளாதார வளங்கள்

**(5*4 = 20 புள்ளிகள்)**